**D.V.C. 15 of 2023** **Previous Date :**

**PW1**

**சிவரஞ்சனி க/பெ.மாதவன்**

**13.03.2026**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 13.03.2026.**

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>**

**1. என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் இரண்டு தம்பிகள். நான் தாக்கல் செய்த மனுவின் சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் தாக்கல் செய்த பதில் உரை என்னிடம் படித்து காண்பித்தார்களா என்றால் சரிதான். நான் எங்கு வேலைக்கு செல்கிறேன் என்றால் நான் வேலைக்கு செல்லவில்லை. எனது கணவர் சேர்ந்து வாழ வேண்டும் என்று குடும்ப நல நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் ஆமாம், ஆனால் எனது கணவர் வீட்டில் எனது கணவரின் மாமியார் வாழ முடியாமல் தொந்தரவு செய்கிறார்கள். HMOP No.478/2023 என்ற வழக்கில் சம்மன் பெற்று விட்டு நான் ஆஜராகவில்லை என்றால் ஆமாம், இங்கு வழக்கு நடக்கிறது. மேற்படி சேர்ந்து வாழ வேண்டும் என்ற மனுவில் ஒரு தலைபட்ச உத்தரவு வழங்கப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது தெரியவில்லை, நான் என் கணவரை கூப்பிட்டேன், என் கணவர் வரவில்லை. என் கணவர் என்னுடன் சேர்ந்து வாழ விருப்பப்படுகிறார் என்றால் ஆமாம், நானும், என் கணவருடன் தான் சேர்ந்து வாழ விரும்புகிறேன், ஆனால் கரூரில் வாழ்ந்தால் மூன்று பேரும் என்னை வாழ விடமாட்டார்கள். நான் சேர்ந்து வாழ வேண்டும் என்று விரும்பியிருந்தால் என் கணவர் சேர்ந்து வாழ வேண்டும் என்று தாக்கல் செய்த வழக்கில் ஆஜராகியிருப்பேன் என்றால் நானும், சேர்ந்து வாழ வேண்டும் என்று தான் என் கணவரை கூப்பிட்டேன், சேர்ந்து வாழ வேண்டும் என்று தான் மகளிர் காவல் நிலையத்தில் மனு கொடுத்தேன். நான் எந்த ஊர் மகளிர் காவல் நிலையத்தில் மனு கொடுத்தேன் என்றால் பழனி மகளிர் காவல் நிலையத்தில் மனு கொடுத்தேன். நான் காவல் நிலையத்தில் கொடுத்த மனு நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நானும், என் கணவரும் எவ்வளவு நாள் பிரிந்து வாழ்கிறோம் என்றால் 5 வருடமாக பிரிந்து வாழ்கிறோம். என் கணவர் என்னை எத்தனை முறை வந்து அழைக்க முயற்சி செய்தார் என்றால் என்**

கணவர் என்னை அழைப்பதற்கு ஒரு முறை கூட முயற்சி செய்யவில்லை.

2. நான் இந்த வழக்கில் சொல்லியுள்ளபடி மருத்துவ சிகிச்சைக்கு மருத்துவமனையில் சேர்ந்தேனா என்றால் என் மூக்கில், என் காதில் அடித்ததால் அதற்காக கோயம்புத்தூர் சாந்தி கியர்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். நான் என் மருத்துவ ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் கையில் உள்ளது. நான் மருத்துவ சிகிச்சை எதுவும் பெறவில்லை என்பதால் தான் மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் அவ்வாறு சிகிச்சை பெற்றிருந்தால் ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. எனது கணவரின் தங்கை எந்த ஊரில் வசிக்கிறார் என்றால் நான் திருமணமாகி என் கணவர் வீட்டில் இருந்து வரும்வரை அவர் என் கணவர் வீட்டில் தான் இருந்தார், நான வந்த பிறகு தான் அவருக்கு திருமணமாகி உள்ளது, அவர் எந்த ஊரில் இருக்கிறார் என்று தெரியவில்லை, அவரும் என்னை கொடுமை செய்தார். எனக்கும், என் கணவருக்கும் பிரச்சனையானபோது ஊர் முக்கியஸ்தர்கள் பேசினார்கள் என்று சொல்லியதில் எந்த ஊரில் வைத்து எப்போது பேசினோம் என்றால் மாமா மற்றும் பெரியவர்கள் மூலம் கோயம்புத்தூர் சூளுரில் வைத்து 2019ல் பேசி எனது கணவருடன் அனுப்பி வைத்தார்கள். திருமணமாவதற்கு முன்பு எனக்கு உடல்நிலை பிரச்சனை இருந்ததா என்றால் இல்லை, என் கணவர் அடித்ததால் தான் ஆனது. குழந்தை பிறந்த பின்பு நானும், எனது கணவரும் எவ்வளவு நாட்களாக ஒன்றாக இருந்தோம் என்றால் குழந்தை 5மாதம் கர்ப்பமாக இருக்கும்போது என் கணவர் அடித்து துரத்திவிட்டார், அதற்கு பிறகு குழந்தைக்கு சுமார் இரண்டு வயது இருக்கும்போது சமாதானம் பேசி அனுப்பி வைத்தார்கள், அதற்கு பிறகும் துரத்திவிட்டார், ஒன்றரை வருடம் என் கணவர் வீட்டில் இருந்தேன். அந்த ஒன்றரை வருடம் நான் எந்த பிரச்சனையும் இல்லாமல் இருந்தேன் என்றால் சரியல்ல, என் மாமியார் இங்கு இருக்கக்கூடாது என்றும், பணம் வாங்கி வா இல்லையென்றால் வேறு கல்யாணம் முடித்து வைத்துவிடுவேன் என்றும் பிரச்சனை செய்தார், குழந்தையையும் யாரும் பார்க்க மாட்டார்கள். தண்ணீர் பைப் மூலம் அடித்ததாக சொல்லியுள்ளதில் நான் அதற்காக மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை, கால் வீங்கியிருந்தது எண்ணெய் வாங்கி போட்டேன். நான் சொல்வதுபோல் என் கணவர் என்னை அடித்திருந்தால் நான் மருத்துவ சிகிச்சை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான்

சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல, அடித்தார், கழுத்தை பிடித்து நெரித்தார். சீர் வரிசை சாமன் விபரத்தை திருமணத்தின்போது எழுதி கையொப்பம் செய்து கொண்டோமா என்றால் ஆமாம், அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். திருமணத்தின்போது நகை போட்ட விபரத்தை எழுதி கையொப்பம் செய்து கொண்டோமா என்றால் ஆமாம், நகை 4 பவுன் என் கணவர் வீட்டில் தான் உள்ளது. நான் ஒன்றரை வருடமான என் கணவர் வீட்டில் இருந்த காலத்தில் என் நகைகளை என் பெற்றோர் வீட்டில் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் தற்போது என் பிழைப்பிற்காக என்ன வேலை செய்கிறேன் என்றால் வேலைக்கு போகவில்லை வீட்டில் தான் இருக்கிறேன். என் கணவர் என்ன வேலை செய்கிறார் என்று தெரியுமா என்றால் சென்ட்ரிங் வேலை செய்கிறார். என் கணவருக்கு எவ்வளவு சம்பளம் என்றால் நான் அங்கு இருக்கும்போதே ஒரு நாளைக்கு ரூபாய் 1000/- வாங்குவார். நான் ஜீவனாம்சம் கேட்கும் தொகை என் கணவரால் கொடுக்க முடியுமா என்றால் என் கணவர் கொடுத்து தான் ஆக வேண்டும் குழந்தையை பார்ப்பதற்காக கொடுக்க வேண்டும். நான் இந்த வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகள் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளதுபோல் எந்த குடும்ப வன்முறையும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கும் ஜீவனாம்சம் தொகை பெறுவதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.03.13 18:25:20 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.